காரணம் கொடுமைகள் தாங்கமுடியாமல். நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் கட்டித்தருவதற்கு ஏற்பாடு செய்கிறோம். கோயில் நிலங்களைப்பற்றி இலாகா இன்னும் முடிவு செய்யவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** அரிசன மக்கள் முன்னேற்றத் திற்காக, எஸ்டிமேட்ஸ் கமிட்டி, பி.ஏ.சி.-யைப்போல் ஒரு கமிட்டியைப் போட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தி லிருந்து பரிந்துரை வந்ததா. கேரளத்திலே அமைத்திருக் கிறார்கள். அம்மாதிரி இங்கேயும் அமைக்க இந்த அரசாங்கத் திற்கு யோசனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி குடியிருப்பு மனைகளைப் பற்றியது. அரிசனங்கள் என்றால் அரிசனங்கள் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பொதுவாகக் கேட்பது என்றால் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, உயர்திரு நம்பியார் அவர்கள் ஒரு அறிக்கை அளித்தார்களே, அந்த அறிக்கையை இந்த அவையின் மேஜையின்மேல் வைப்பதற்கு இந்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திரு. நம்பியார் அவர்களின் அறிக்கையை அரசே இன்னும் பரிசீலனை செய்ய வில்லை. பரிசீலனை செய்தபிறகு அவசியப்பட்டால் வைக்கலாம்.

### கழுகேர்கடை அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

* 134 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கழுகேர்கடை அரிசனங்களுக்கு குடியிருப்புக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது மனைப் பட்டா வழங்கப்படும்?

1974 சனவரி 24]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. முடிந்த பின் பட்டாக்கள் வழங்கப்படும்.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, இருபதாண்டுக் காலமாக திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கழுகேர்கடை கிராமத்திலுள்ள அரிசன மக்கள் குடியிருக்க இடமில்லாமல் இருபதாண்டுக்காலமாக மனுப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுதாவது அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தமைக்கு நன்றி சொல்லி, உடனடியாகப் பட்டாக்கள் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** எல்லா வேலையும் முடிந்து 1973 மார்ச் திங்களில் பணமும் அவர்களுக்கு டிரஷரியில் கட்டியாகிவிட்டது. இப்பொழுது மறுபடியும் நிலச்சொந்தக்காரர்கள் வேறு சிலருக்குச் சொந்தம் என்று வருகிறார்கள். மின்சாரக் கம்பிகள் ஓடுகின்றன என்று சொல்கிறார்கள். பரிசோதனை செய்துதான் எடுத்திருக்கிறார்கள். ஆனாலும் புகார் வந்திருப்பதால் மீண்டும் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக வரையறுக்கப்பட்டபிறகு இந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்து பட்டாக்கள் வழங்கப்படும்.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, சில நேரங்களில், அரிசனங்களுக்காக இடங்களை ஆர்ஜிதம் செய்யும் நேரத்தில் அந்த இடத்திற்குச் சொந்தக்காரர்கள் வேண்டுமென்று அங்கே மின்சாரக் கம்பங்களை நட்டு அந்தப் பகுதியிலே லைன்களை இணைக்கிறார்கள். எனவே, அவைகள் மனுக்களுக்கு முந்தியதா, பிந்தியதா என்று பார்த்து, மனுக்களுக்குப் பிந்தியதாக இருந்தால் அவைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** குறுக்கீடுகள் எதுவும் இல்லையென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். வேண்டுமென்றே நடப்படுகிறது என்றார்கள். அப்பொழுது கேட்டால் மின்சாரக் கம்பிகள் ஓடுகின்றன என்ற காரணத்தைக் காட்டியும், வேண்டுமென்றே சில குறுகியகாலப் பயிர்களை, கேழ்வரகைப் போட்டு வைக்கிறார்கள், வாழையை நட்டுவிட்டார்கள் என்றெல்லாம் சொல்லி மறுபடியும் நாங்கள் நிலத்தைக்

[1974 சனவரி 24

கொடுக்க மாட்டோம் என்று மறுப்பு தெரிவிக்கிறார்கள். இவைகளெல்லாம் இல்லாத வகையில் மாண்புமிகு அங்கத்தினர்களும் துணை செய்தால் விரைவில் எடுத்துக் கொடுக்க முடியும்.

### முத்தூர் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*135 வினா—**திரு. மு. பழனிசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி முத்தூர் கிராமம், ஊடையம் துத்திக் குளத்தில் உள்ள அரிசனங்கள் அண்மையில் வீட்டுமனை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) விண்ணப்பம் ஏதும் வரவில்லை. எனினும் குறிப்பிட்ட கிராமத்தைச் சார்ந்த அரிசன மக்களுக்கு வீட்டுமனை அளிப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பர வரைவு 11—10—1972 தேதியில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, தற்பொழுது அரிசன நலத்துறையில்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைகள் வழங்கப் படுவது தொடர்ந்து நடைபெறுகிறதா அல்லது வேறொரு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சந்தேகமே இல்லை, இந்தத் துறைதான் செய்துகொண்டு வருகிறது.

### காரணி கிராம இருளர்களுக்கு வீட்டு வசதி

*136 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், காரணி கிராமத்தில் இருளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தினை விரைந்து நிறைவேற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவடையும் ?